

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக முப்பெரும் விழாவில் சிறந்த பகுதிச் செயலாளர் விருது பெற்ற ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை அவர்களுக்கு, சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாருமான தயாநிதி மாறன் எம்.பி., மற்றும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்றனர். உடன் தலைமை கழகச் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், சென்னை மேற்கு மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.என்.துரை, திருமதி.ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி, வி.எஸ்.கலை, தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள் நுங்கை வி.எஸ்.ராஜ், எம்டிஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், ஐ.கென்னடி, டி.ஜோஸ்டேனியல், பா.ராபர்ட், திருமதி எம்.வெற்றிச்செல்வி மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



கோவை, அவினாசி சாலை, லீ மெரிடியன் எதிரில், கோவை மாவட்ட தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டும் விழா நடைபெறும் இடத்தை கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேரில் ஆய்வு செய்தார். இதில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆசுதாகர், கழக மாணவர் அணி முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, கழக மாணவர் அணி துணை செயலாளர் கோகுல் உள்ளபட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

மதுரை மத்திய சிறையில் பயங்கரம்.. கைதி தாக்கியதில் சிறைக்காவலர் படுகாயம்!

மதுரை, நவ. 5 -

மதுரை மத்திய சிறையில் சிறை கைதி மூர்த்தி என்பவர், சிறைக்காவலரை வாளியால் கொடூரமாக தாக்கியுள்ள சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. குளிப்பதற்கு குடிநீரை பயன்படுத்த முயன்ற சிறைக்கைதி மூர்த்தி என்பவரை சிறைக் காவலர் தெய்வநாயகம் கண்டித்ததால், கோபம் அடைந்த கைதி, அவரை முகத்தில் பயங்கரமாக தாக்கியுள்ளார். இந்த தாக்குதலில் சிறைக்காவலர் தெய்வநாயகம் படுகாயம் அடைந்த நிலையில், அவர் சிறை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் சமீப நாட்களாக சிறையில் கைதிகள் அத்துமீறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. புழல் சிறையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பி ஓடிய நிலையில், தேனி சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பி ஓடி நாட்டையே அதிர வைத்தனர். சிறையில் அடுத்தடுத்து நடக்கும் இந்த சம்பவங்கள் தமிழ் நாட்டில் சிறையில் பாதுகாப்பு என்ற ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பியது

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் தற்போது மீண்டும் அதிர்ச்சி சம்பவம் நடைபெற்றுள்ளது. மதுரை மத்திய சிறையில் சிறை கைதி மூர்த்தி என்பவர், சிறைக்காவலரை வாளியால் கொடூரமாக தாக்கியுள்ளார். மதுரை மத்திய சிறையில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த சிறையில் நேற்று முன்தினம் காலை குளிப்பதற்காக விசாரணை கைதிகள் உள்ள பகுதியில் கைதிகள் வந்துள்ளனர்.

அங்கு பாதுகாப்புக்கு வெறும் 4 காவலர்களே இருந்ததாக கூறப்படுகிறது. கைதிகள் குளிப்பதற்காக போர் வாட்டர் உள்ளே இருக்கும் நிலையில் மூர்த்தி என்ற கைதி மட்டும், குடிநீரில் குளிக்க முயன்றுள்ளார். இதற்காக வாளியில் நல்ல தண்ணீரை பிடித்துள்ளார். இதை கவனித்த தலைமை காவலர் தெய்வநாயகம், கைதி மூர்த்தியை சத்தம் போட்டு வாளியை பறித்துள்ளார். இதனால் கோபம் அடைந்த கைதி மூர்த்தி காவலரை தனது கையால் முகத்தில் ஓங்கி குத்தியுள்ளார்.

இந்த தாக்குதலில் கண்ணில் பலத்த காயம் அடைந்த தலைமை காவலர் தெய்வநாயகம் நிலைகுலைந்துள்ளார். கைதி மூர்த்தி தாக்கும் போது சக கைதிகளும் வேடிக்கை பார்த்ததாக சொல்லப்படுகிறது. இதற்கிடையே அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த இதர காவலர்கள், காவலர் தெய்வநாயகத்தை மீட்டு சிறை மருத்துவமனையில் அனுமதித்தனர். அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காவலரை தாக்கிய கைதி மூர்த்தியிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்த சம்பவம் பற்றி சிறைக்காவலர்கள் கூறுகையில், "தேனியில் கைதிகள் தப்பி ஓடிய சம்பவத்திற்கு பிறகு சிறையில் காவலர்களுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், விழிப்புடன் காவலர்கள் இருப்பதால் கைதிகள், காவலர்கள் மீது கடும் ஆத்திரத்தில் இருக்கிறார்கள். கைதிகள் மிரட்டும் நிலையும் உள்ளது. காவலர்களை தாக்க தக்க நேரம் பார்த்து கொண்டு இருப்பது போல இருப்பதால், தேவையான நடவடிக்கைகளை சிறை நிர்வாகமும் தமிழக அரசும் எடுக்க வேண்டும்" என்றனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு சென்னை மத்திய சிறையில் கைதிகளுக்குள் கலவரம் ஏற்பட்டது. அப்போது சிறை அதிகாரி எரித்துக் கொல்லப்பட்டார். இத்தகைய கொடூர சம்பவங்கள் போல எதுவும் மீண்டும் நடைபெறாமல் தடுக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசும், சிறைத்துறையும் மேற்கொள்ள வேண்டும் என்பதே சிறை காவலர்கள் மற்றும் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



கோவை தெற்கு மாவட்டம், ஒருங்கிணைந்த குறிச்சி பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் குறிச்சி வடக்கு பகுதி அலுவலகத்தில் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதி கழக செயலாளர்கள் காதர், குறிச்சி வடக்கு, கார்த்திகேயன், குறிச்சி தெற்கு, செந்தில்குமார், குறிச்சி மேற்கு, குறிச்சி பகுதி மாமன்ற உறுப்பினர் குணசேகரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கூலூர் பிரபு உள்பட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பகுதி சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. ஆட்சியில் கோவை மாவட்டத்தில்

பழுதான சாலைகளை சீரமைக்க நிதியின்றி தவிக்கும் நெடுஞ்சாலைத்துறை !

போக்குவரத்து நெரிசல் – மக்கள் அவதி!

கோவை, நவ. 5 -

கோவை மாவட்டத்தில், மாநில நெடுஞ்சாலைத்துறை, திட்டப் பிரிவு, நபார்டு பிரிவு போன்றவற்றில் ஆண்டிற்கு 70க்கும் மேற்பட்ட திட்டப்பணிகள் நடத்தப் பட்டு வந்தது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பெரும்பாலான பிரிவுகள் இணைக்கப்பட்டது. கோட்டம் 1, 2 என பிரிக்கப்பட்டது. அலுவலக ரீதியான நடைமுறை மாறியமைக்கப்பட்டது. அதன் பின்னரும் நடப்பாண்டிற்குரிய திட்டப்பணிகள் சொற்ப அளவில் கூட துவங்கப் படவில்லை. மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் சாலை கட்டுமானங்கள் மேம்பாடு அடைய முடியாத நிலைமை இருக்கிறது.

மாவட்ட அளவில் வாகனங்களின் பெருக்கம், ரோடு பழுது பிரச்சினை அதிகமாக இருக்கிறது. இருவழிப் பாதையை நான்கு வழிப் பாதையாக மாற்ற வேண்டும், நான்கு வழிப் பாதையை ஆறு வழிப் பாதையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகால மாக இருக்கிறது. இது பரிசீலிக்கப்படவில்லை. மாவட்ட சாலை, கிராம பகுதி சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மருதமலை ரோடு விரிவாக்கம் தவிர, வேறு எந்த வேலைக்கும் மாநில நெடுஞ்சாலைத்துறை ஒப்புதல் தரவில்லை.

பீளமேடு, கோல்டு வின்ஸ், நீலாம்பூர் மேம்பாலம் விரிவாக்கம் குழப்ப நிலையில் கிடக்கிறது. கோவை மாநகராட்சி சார்பில் பாதாள சாக்கடை, குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டு நாசமான சாலைகளை சீரமைக்க 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த பணியும் துவக்கப் படவில்லை. இந்த நிலையில் மழை காரணமாக, பாதிப்பு மேலும் அதிகமாகிவிட்டது.

மாவட்ட அளவில் இது வரை 17 நாட்கள் மழை பெய்துள்ளது. இதில், 200 கி.மீ முதல் 250 கி.மீ தூரம் வரை நெடுஞ்சாலைத்துறையின் சாலைகள் பள்ளமாகி தார் தளம் மோசமாகி விட்டது. சில இடங்களில் பாலங்களும் சேதமாகி விட்டது சாலை பணிகளுக்கு பல கோடி ரூபாய் நிதி எதிர் பார்த்து நெடுஞ்சாலைத் துறையினர் காத்திருக்கின்றனர். ஆனால், நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

கோவை மாநகரம், தொழில் நகர அந்தஸ்தில் இருந்தபோதிலும், சாலைகள் கட்டமைப்பில் முக்கியத்துவம் தரப்படவில்லை. சாலைகள் சிதைந்து வருவதால், தொழில்துறையினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். உற்பத்தி செய்த பொருட்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல முடியாத நிலை இருக்கிறது.

நெடுஞ்சாலை ஆணையகத்தின் மதுக்கரை நிலாம்பூர் பைபாஸ் சாலை விரிவாக்க பணியும் துவங்கப் படவில்லை. இது திட்ட அறிக்கையுடன் முடங்கி கிடக்கிறது. தினமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் தரமற்ற நெரிசல் மிக்க சாலைகளால் விபத்துக் கள் அதிகமாகி வருகிறது. தொழில் நகரம் விபத்து நகரமாக மாறிவிட்டது. சாலை பராமரிப்பு பணி, சீரமைப்பு நடத்த முடியாமல் நெடுஞ்சாலைத்துறை தள்ளாடி வருகிறது. சாலை கட்டமைப்பை மேம்படுத்த போதிய நிதி ஒதுக்கினால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்கிறார்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள்.



திராவிட முன்னேற்றக் கழக மாணவர் அணி மண்டல ஆலோசனை கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாநில செயலாளர் வீரமணி ஜெயகுமார் தலைமையில் நடைபெற்றது. சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட மாணவர் மன்ற உறுப்பினர் படிவங்களை மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில் மாநில செயலாளர் வீரமணி ஜெயகுமார் அவர்களிடம் வழங்கினார். உடன் மாணவர் அணி மாநில துணை செயலாளர் ராமகிருஷ்ணன், மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தீப்பொறி ஆறுமுகம்

நவம்பர் 5 (2016)



சிறிய வயதிலேயே பேச்சாளராகி, கழக மேடைகளில் எந்த கருத்தையும் தைரியமாக எடுத்துச் சொல்லி, தமது பேச்சாற்றலால் பெரும் புகழ் பெற்று, தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், "இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே தந்தை பெரியார் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, பெரியாரால் அப்போதே பாராட்டப்பட்டவர். இவருடைய பேச்சைக் கேட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் இவருக்கு "தீப்பொறி" என்ற அடைமொழியை குறிப்பிட்டு, பின்னர் காலப்போக்கில் "தீப்பொறி" என்றாலே இவரைக் குறிப்பிடும் அளவிற்கு பெயர் பெற்று விட்டார்" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நேபாளத்தில் ஹெலிகாப்டர் விபத்து!



காத்மாண்டு நவ. 5 -

நேபாளத்தின் எவரெஸ்ட் சிகரப் பகுதியில் இரு ஹெலிகாப்டர்கள் தரையிறங்க முயன்ற போது, அவற்றின் இறக்கைகள் காற்றில் ஒன்றுடன் ஒன்று மோதி பயங்கர விபத்துக் குள்ளானதில், இந்தியச் சுற்றுலாப் பயணி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் இருந்து சுமார் 250 கி.மீ தொலைவில் உள்ள சோலுகும்பே மாவட்டத்தின் பெரிச்சே என்ற இடத்தில் உள்ள ஹெலிபேடில், நேற்று காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

ஃபிஷ்டெயில் ஏர்' மற்றும் 'ஏர் டைனாஸ்டி' ஆகிய இரு தனியார் நிறுவனங் களின் ஹெலிகாப்டர்கள் பெரிச்சே ஹெலிபேடில் ஒரே நேரத்தில் தரையிறங்க முயன்றுள்ளன.

அப்போது, எதிர்பாராத விதமாக இரு ஹெலிகாப்டர்களின் சுழல் இறக்கைகளும் ஒன்றுடன் ஒன்று பல மாக மோதிக்கொண்டன.

இந்த அதிர்ச்சியூட்டும் காட்சிகள் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி, தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வண்ணை தேவகி

நவம்பர் 5 (2009)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம்வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

"கழகம், கழகம் என்று தன்வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம்பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.